# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590**


ஆணை நாள் 10.11.2020

முன்னிலை

**முனைவர் ரா.பிரதாப்குமார்**

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 7535/B/2019**

| | |
|---|---|
| திருமதி. K. ஜெயந்தி | மேல்முறையீட்டாளர் |
| எதிர் | |
| பொது தகவல் அலுவலர்,<br>தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,<br>பல்லடம் வட்டம்,<br>திருப்பூர் மாவட்டம். | பொது அதிகார அமைப்பு |

**ஆணை**

COVID-19 காரணமாக தமிழ்நாடு அரசால், ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை மேற்கொள்ள இயலாததால், இன்று (10.11.2020) தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இன்றைய தின விசாரணையில் மனுதாரர், திருமதி / செல்வி. K. ஜெயந்தி அவர்களும் பொது தகவல் அலுவலர் மற்றும் தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், பல்லடம் அவர்களும் விசாரணையில் கலந்து கொண்டார்கள்

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)ன் கீழ் அளிக்கப்பட்ட தனது 3.4.2019 மனுவில், நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், பல்லடம் வட்டம், கோடங்கிபாளையம் கிராமத்தில் உள்ள கோ.ஜனார்த்தனம் அவர்களுக்கு எவ்வாறு உட்பிரிவு செய்து பட்டா வழங்கப்பட்டது மற்றம் அவர் பட்டா பெறுவதற்கு திரு.கோ.ஜனார்த்தனம் அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்கள் பற்றிய விவரங்களையும் தகவலாக கோரி பொது தகவல் அலுவலர், திருப்பூர் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

3. பொது தகவல் அலுவலரிடமிருந்து பதில் கிடைக்கப் பெறாத மனுதாரர் 13.5.2019 தேதியிட்டு, தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 19(1)ன் கீழ் முதல்

மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டு அலுவலருக்கு விண்ணப்பித்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரிடமிருந்து பதில் எதுவும் கிடைக்கப் பெறாததால் மனுதாரர், 19.7.2019 தேதியிட்டு, இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அந்த மனுவின் மீது இன்று விசாரணை நடைபெற்றது.

4. இன்றைய விசாரணையின்போது, மனுதாரருக்கு உரிய தகவல் வழங்கப்படவில்லை என்று ஆணையம் கருதி, பொது தகவல் அலுவலர் ஐந்து நாட்களுக்குள் மனுதாரருக்கு உரிய தகவலை அளிக்க வேண்டும் என்றும் அவ்வாறு அளிக்கப்படாவிட்டால் பொது தகவல் அலுவலருக்கு அபராதம் விதிக்கப்படும் என்றும் பொது தகவல் அலுவலருக்கு எச்சரிக்கை செய்யப்பட்டது.

6. பொது தகவல் அலுவலர், குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் மனுதாரருக்கு தகவல் அனுப்பி, அதன் நகலினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். மனுதாரருக்கு அவர் கோரிய தகவல் பொது தகவல் அலுவலரால் அளிக்கப்பட்டது என்று ஆணையம் கருதுகிறது. எனவே, இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணை முற்றாக்கப்படுகிறது.

**ஒம்/-ரா.பிரதாப்குமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண்.SA/7535/2019**

பெறுநர்
பொது அதிகார அமைப்பு
பொது தகவல் அலுவலர்,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
பல்லடம் வட்டம், திருப்பூர் மாவட்டம்.

மனுதாரர்
திருமதி / செல்வி. K. ஜெயந்தி,
5, எஸ்.பி.ஐ. காலனி,
அகிலா காம்பவுண்ட்,
ராயபுரம், திருப்பூர் மாவட்டம்.
அலைபேசி - 99 438 44 699,

Copy to: File
SSPA-16.11.2020